**இலங்கை டென்னிஸ் சங்கம் - 2023**
---------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை டென்னிஸ் சங்கத்தின் (''சங்கம்'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவுக் கூற்று, திரண்ட நிதியங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் 1993 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க விளையாட்டு (திருத்தம்) சட்டத்தின் பிரிவு 9 ஆல் திருத்தப்பட்ட 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின் பிரிவு 21-அ இற்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, சங்கத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRS/LKAS) இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க (SLFRS/LKAS) தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சங்கத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சங்கத்தினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சங்கம்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சங்கத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சங்கத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புக்களை மேற்கொண்டு தொழில்சார் ஐயப்பாட்டினை பேணுகிறேன். மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல். தவறாகக் காட்டுவது காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஏற்படும் ஆபத்தின் விளைவானது அதிகமாகும்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் காரணமாக சங்கத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீது பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு

கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீதான அடிப்படையினை பயன்படுத்துதலின் பொருத்ததன் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதியளவான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் முடிவு செய்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையல்லாததாக இருக்குமாயிருந்தால் எனது அபிப்பிராயம் திருத்தப்படுதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் சங்கத்தின் தொடர்ச்சியாக நிலைத்திருத்தலை முடிவுறுத்த நேரிடலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும் ;

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சங்கத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க சங்கம் செயற்படுகின்றதாஎனவும் ;

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ;

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்டபான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறிப்பிட்ட நியமங்களின் தொடர்புகளுடன் இணங்காமை | முகாமையின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியமம் 07 - ''காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள்'' அன் பிரகாரம் முதலீடொன்று பொதுவாக மேற்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்கள் அல்லது அதற்கும் குறைவான குறுகிய முதிர்வைக் கொண்டிருக்கும்போது மாத்திரமே காசுக்கு சமமானதாக தகுதி பெறுகின்றது. எவ்வாறாயினும் சங்கம் ரூபா 3,000,000 மொத்த பெறுமதியான 01 வருட முதிர்வு காலப்பகுதியை கொண்டுள்ள மூன்று | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் சங்கம் இணங்குதல் வேண்டும். |

நிலையான வைப்புக்களை காசு மற்றும் காசுக்கு சமமானதாகக் காட்டியுள்ளது. எனவே, ரொக்கம் மற்றும் காசு மற்றும் காசுக்கு சமமானவை மிகைப்படுத்திக் காட்டப்பட்டுள்ளதுடன் குறுங்கால முதலீடானது அந்தத் தொகையால் குறைவாக காட்டப்பட்டுள்ளது.

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சங்கத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், குத்தகைக்கு வழங்கப்பட்ட 04 ஏக்கர், 01 ஷரூட் மற்றும் 29.8 பேர்ச் பரப்பளவனை கொண்ட காணியின் சார்பாக கொழும்பு மாநகர சபைக்கு (CMC) செலுத்த வேண்டிய வாடகை ரூபா 26,325,000 ஆகும். அதேசமயம், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான CMC இன் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களில் இது ரூபா.43,726,967 தொகையாக காட்டப்பட்டுள்ளது. எனவே, நிதிக் கூற்றுக்களில் இருந்து ரூபா 17,401,967 தொகை விடுபட்டுள்ளது. | CMC இற்கும் SLTA இற்கும் இடையே எவ்வித உடன்படிக்கையும் காணபடபடாமை மற்றும் CMC இற்கு செலுத்த வேண்டிய தொகை சர்ச்சையில் காணப்பட்டமை காரணமாக இந்தத் தொகை நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்படவில்லை. | நிலுவையில் உள்ள வாடகையை உடனடியாக செலுத்தப்படல் வேண்டும் மற்றும் குத்தகை ஒப்பந்தம் புதுப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட வட்டி வருமானக் கணிப்பீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்பின் உண்மையான வட்டி வருமானம் ரூபா 146,767 ஆகும். எவ்வாறாயினும், இந்தத் தொகையினை நிதி கூற்றுக்களில் சங்கம் சேர்த்திருக்கவில்லை. எனவே, மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம் அந்தத் தொகையால் குறைவாக காட்டப்பட்டுள்ளது. | இந்த அங்கீகரிக்கப்படாத வட்டி வருமானம் 2024 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்படும். | ஆண்டுக்கான சரியான வட்டி வருமானம் கணக்கு வைக்கப்படல் வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வெண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்தவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமையின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அட்டுறு செலவுகளின் மீதி ரூபா 34,183,574 ஆகும். அதில் ரூபா 8,185,483 மற்றும் ரூபா 62,000 தொகைகள் முறையே 2-5 ஆண்டுகளுக்கிடையில் மற்றும் 5 ஆண்டுகளுக்கும் மேலாக தீர்க்கப்படாமல் இருந்தன. எவ்வாறாயினும், நிலுவையில் உள்ள நிலுவைத் தொகையினை தீர்ப்பனவு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | நீண்டகால நிலுவைகளை தீர்ப்பனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் சங்கத்தினால் எடுக்கப்படல் வேண்டும். |

வரையிலும் கூட பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.7 சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமையின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| | 2016 ஒக்தோபர் 27 ஆம் திகதியிடப்பட்ட 1990/23 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 இன் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டு சங்க பிரமாணங்கள் | | | |
| (அ) | பகுதி II இன் 3(i) மற்றும் (ii) ஆம் பந்தி | தற்போதைய சர்வதேச தரவரிசை நிலை, குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் எதிர்பார்க்கப்படும் இலக்கு மற்றும் செயல்திறன் அளவை அதிகரிப்பதற்கான தந்திரோபாயங்கள் என்பவற்றை உள்ளடக்கிய எதிர் வரும் பத்து வருட காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டமொன்று அங்கீகாரத்திற்காக விளையாட்டு அபிவிருத்திக்கான பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | விளையாட்டு பிரமாணங்களுடன் சங்கம் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | பகுதி III இன் 7(xii) ஆம் பந்தி | அடுத்த ஆண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் நடப்பாண்டு முடிவடைவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் விளையாட்டு அபிவிருத்திக்கான பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | சங்கம் விளையாட்டு பிரமாணங்களுடன் இணங்குதல் வேண்டும். |

## 1.8 பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு விடயம் | முகாமையின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி, தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரி மற்றும் நிறுத்திவைத்தல் வரி | இந்த நிலுவைகள் 2012 ஆம் ஆண்டுக்கு முந்தைய ஆண்டுகளில் இருந்து வருகின்றன. நாங்கள் உள்நாட்டு | நியதிச்சட்ட தேவைப்பாடுகளுடன் சங்கம் இணங்குதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆகியவற்றின் மொத்த தொகை ரூபா 908,892 ஆனது 2025 ஏப்ரல் 30 அன்றும் கூட 5 ஆண்டுகளுக்கும் மேலாக உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்படாமல் இருந்துள்ளது. | இறைவரி ஆணையாளருக்கு கொடுப்பனவினை செலுத்துவோம். | |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,175,832 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 12,932,497 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 10,756,665 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முந்தைய ஆண்டை ஒப்பிடும்போது சக்கர நாற்காலி திட்ட வருமானம் குறைவடைந்தமை மற்றும் நிர்வாக மற்றும் ஏனைய செயற்பாட்டு செலவுகள் முறையே ரூபா.3,908,680 மற்றும் ரூபா.11,821,595 அதிகரித்தமை என்பன இந்த வீழ்ச்சிக்கான காரணங்களாகும்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமையின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| சங்கத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் முந்தைய ஆண்டுகளில் பல்வேறு தரப்பினருக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், நிலுவையில் உள்ள குத்தகை வாடகை ரூபா 9,080,298 மற்றும் மீள் நிரப்பல் செய்ய வேண்டிய மின்சாரக் கட்டணத் தொகை ரூபா 1,138,854 ஆகியன குத்தகைதாரர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டிருக்கவில்லை மற்றும் இவை 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2 முதல் 5 ஆண்டுகளாக நிலுவையில் உள்ளன. மேலும், இந்த வாடகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக குத்தகைதாரர்களுடன் எவ்வித உடன்படிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனவே, நிலுவை தொகைகள் தொடர்பாக குத்தகைதாரர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையை செயல்படுத்த முடிந்திருக்கவில்லை. | இந்த சூழ்நிலையைத் தவிர்த்துக்கொள்வதற்காக CMC யிடமிருந்து குத்தகை உடன்படிக்கையினை பெற்றுக்கொண்டதன் பின்னர் SLTA விளையாட்டுப் பிரிவுடன் எழுத்துமூல உடன்படிக்கையினை மேற்கொள்வதற்கு குழு தீர்மானம் மேற்கொண்டது. | வளாகத்தின் குத்தகை தொடர்பாக சங்கத்தால் முறையான வழிமுறை அறிமுகப்படுத்தப்பட்டு பின்பற்றப்படல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமையின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சர்வதேச டென்னிஸ் சம்மேளனத்தின் (ITF) தர நியமத்தினை பூர்த்தி செய்யும் வகையில் ரூபா 21,499,508 பெறுமதியான பதினான்கு (14) டென்னிஸ் மைதானங்களை சங்கம் அபிவிருத்தி செய்திருக்கவில்லை. | கருத்துக்கள் கிடைக்கப் பெறவில்லை. | சர்வதேச பிரமாணங்கள் மற்றும் தர நியமங்களின் பிரகாரம் டென்னிஸ் மைதானங்கள் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | மாகாண, மாவட்ட மற்றும் பிராந்திய மட்டங்களில் டென்னிஸின் முன்னேற்றத்திற்கு அவசியமான தகவல்களை வழங்குவதற்கான முறையான தரவுத்தள முறைமையொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. எனவே இது இலங்கையில் டென்னிஸின் முன்னேற்றத்திற்கு பாதகமான விளைவை ஏற்படுத்தியது. | கருத்துக்கள் கிடைக்கப் பெறவில்லை. | இலங்கையில் டென்னிஸ் விளையாட்டின் முன்னேற்றத்திற்காக ஒரு முறையான தரவுத்தள முறைமையொன்று நிறுவப்படல் வேண்டும். |

## 4. கணக்களிதன்மை மற்றும் நல்லாளுகை

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு விடயம் | முகாமையின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2016 இன் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டு சங்க பிரமாணங்களின் பகுதி III இன் 7(xiii) ஆம் பந்தியின் இன் பிரகாரம், ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்ததன் பின்னர் இரண்டு மாதங்களுக்குள் சான்றளிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வாறாயினும், 08 மாதங்களாக தாமதப்படுத்திய பின்னர், 2023 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் வருடாந்த நிதிக்கூற்றுக்களை 2024 ஒக்தோபர் 24 அன்றே சங்கம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்துள்ளது. | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | விளையாட்டு பிரமாணங்களுடன் சங்கம் இணங்குதல் வேண்டும். |